REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)


CVPA NEWS
A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals
AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION
FILM - 22 CLICK - 11

**நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!**

**- CVPA NNT**

# நமக்கு நாமே திட்டத்தின் உறுப்பினர்கள் CVPA NNT வங்கி கணக்கில் பங்களிப்பு தொகையை உடனடியாக செலுத்த CVPA செயலாளர் வேண்டுகோள்!

வணக்கம்,

என்னுடைய தாயாரின் மறைவிற்கு நேரில் வந்திருந்து, அஞ்சலி செலுத்திய, அனைத்து நல்ல உள்ளங்களுக்கும்,தவிர்க்க முடியாத காரணங்களால் வர இயலாமல் போய், கைபேசியில் அழைத்து ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும்,எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த நமது சங்க உறுப்பினர் திரு.பிரசாத் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இவர் நமக்கு நாமே திட்டத்தில் உறுப்பினராக இருந்து, மறைந்த CVPA NNTயின் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இவரது பங்களிப்பும், மிகவும் போற்றுதலுக் குறியதாக இருந்துள்ளது. ஆனால்,இவர் மரணம் அடைந்தபோது, இவரது CVPA NNT வங்கி கணக்கு ஜீரோ பேலன்ஸ் என்கிற நிலையில் இருந்தது. இதனால் CVPA NNT விதிமுறைப்படி,அவருடைய குடும்பத்திற்கு உதவிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது,உள்ளபடியே வருத்தத்திற்குரியது.

நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்துள்ள உறுப்பினர்கள்,இந்த திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து கவனமாகவும், பொறுப்பாகவும் செயல்படும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நமது கலைஞர்களின் குடும்பம், அவருடைய மறைவிற்கு பிறகு பாதுகாக்கப் படவேண்டும் என்பதே நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் முக்கியமான அம்சமாக உள்ளது.

ஆயிரம் உறுப்பினர்கள் அவசியமாக இணைய வேண்டுமென எல்லோரையும் கேட்டுக் கொண்டோம். 700 உறுப்பினர்கள் இணைவதற்குள், ஏழு உறுப்பினர்கள் இறந்து போனார்கள். ஐந்து உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு CVPA NNT நிதியில் இருந்து தாராளமாக நிதி வழங்கிய நம்மால் இன்னும் இருக்கும் இரண்டு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு தாராளமாக நிதி எடுத்து வழங்கிட முடியாத நிலை உள்ளது. CVPA NNT-யில் இணைந்த பல உறுப்பினர்களின் வங்கி கணக்கு ஜீரோ பேலன்ஸ் என்கிற நிலைக்கு சென்றதே இதற்கு முக்கிய காரணமாகும்.எனவே உங்களுடைய CVPA NNT வங்கி கணக்கில் எவ்வளவு பணம் செலுத்த வேண்டும் என்று தெரிந்து கொண்டு உடனடியாக செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மார்ச் மாதத்தில் ரெனிவல் செய்ய வேண்டியவர்கள், தங்களுடைய அடையாள அட்டையை புதுப்பித்து கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

இப்படிக்கு
**P. துரைபாபு**
CVPA செயலாளர்

## ஆழ்ந்த இரங்கல்



தென் சென்னை-எஸ்1, சைதாப்பேட்டை பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் சண்முகவேல் ஸ்டுடியோ உரிமையாளர் **திரு. M.C. பிரசாத்** அவர்கள், (வயது 51)கடந்த 03.03.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் இன்னாள் மற்றும் முன்னாள் நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள்,சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர், நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி, மறைந்த சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்,ஈமச்சடங்கு தொகை 20,000 ஆயிரம் ரூபாயை அவருடைய குடும்பத்தினரிடம் சங்க நிர்வாகிகள் ஒப்படைத்தனர்.மேலும் இவர் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாக்காப்பு திட்டத்தில் உறுப்பினராக இருந்தார்.ஆனால் இவருடைய CVPA NNT கணக்கு ஜீரோ பேலன்ஸ் ஆகிவிட்ட காரணத்தால், இவருடைய குடும்பம் CVPA NNT யின் நிதியை பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பது, குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

- CVPA

## வருந்துகிறோம்



நமது CVPA சங்கத்தின் செயலாளர், திரு.P.துரைபாபு அவர்களின் தாயார், **திருமதி. க.மல்லிகா,** (வயது 88) அவர்கள் கடந்த 04.03.2026 அன்று இயற்கை மரணம் அடைந்தார். அம்மையாருக்குநம்முடையசங்கத்தின் சார்பாக சங்க நிர்வாகிகள்,முன்னாள் நிர்வாகிகள், CVPA உறுப்பினர்கள் என அனைவரும் வந்திருந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். மாநில (TVPA) சங்கத்தின் சார்பாகவும் மாநில சங்க நிர்வாகிகள் நேரில் வந்து அம்மையாருக்கு மரியாதை செலுத்தி, திரு.துரைபாபு அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டனர்.

- CVPA

## வருந்துகிறோம்



தென்சென்னை எஸ்-2, திருவான்மியூர் பகுதியைச் சேர்ந்த நமது CVPA உறுப்பினர் திரு. அருள்ஜெய் அவர்களின் தாயார், **திருமதி. குப்பம்மாள் ஜெயராமன்** அவர்கள், 12.02.26 அன்று இயற்கை மரணம் அடைந்தார்.அன்னாரின் மறைவிற்கு CVPA சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

- CVPA



மத்திய சென்னை,புரசைவாக்கம் பகுதியை சேர்ந்த நமது சங்கத்தின், மூத்த உறுப்பினரும், CVPA வின் முன்னாள் புரசைவாக்கம் பகுதி செயலாளர் திரு.S.கலியபெருமாள் அவர்களுடைய மகள் Dr.K.கமலி–Er.V.விக்னேஷ் இவர்களுக்கு நடைபெற்ற (09.03.2026) திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள்,மற்றும் முன்னாள் நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை,அண்ணாநகர் பகுதி செயலாளர்,திரு.ஸ்ரீதர் அவர்களுடைய இல்லத்தில் (22.03.2026) நடைபெற்ற சுப நிகழ்ச்சியில் நமது CVPA சங்கத்தின் சார்பாக சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்,சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.



மத்திய சென்னை, அயனாவரம் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினர், சூர்யா டிஜிட்டல் ஸ்டுடியோ உரிமையாளர், திரு.R.சூர்யா – K.ஷர்மிளா இவர்களின் திருமண வரவேற்பு( 24.03.2026) நிகழ்ச்சியில், CVPA சார்பாக சங்க நிர்வாகிகள், மற்றும் முன்னால் நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள்,மற்றும்சங்க உறுப்பினர்கள் என அனைவரும் வரவேற்பு நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.



தென்சென்னை எஸ்–2 வேளச்சேரி பகுதியை சார்ந்த நமது சங்க உறுப்பினர் ஸ்ரீகணபதி ஸ்டுடியோ,திரு.S. தேவராஜ்–கீதா இவர்களின் மகள் D.வினிதாஸ்ரீ–K.நாகராஜ் இவர்களுக்கு நடைபெற்ற (05.03.2026) திருமண வரவேற்பு நிகழ்வில் நமது சங்க நிர்வாகிகள், பகுதி செயளாலர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, திருவல்லிக்கேணி பகுதியை சேர்ந்த,நம்முடைய சங்க உறுப்பினர் திரு.T. கோகுல் – G. நந்திதாதேவி இவர்களின் மகன், திரு.G. சுர்ஜித் ராம் – H. ப்ரீத்திஷாஸ்ரீ இவர்களுடைய திருமண வரவேற்பு (08.03.2026) நிகழ்வில் CVPA சார்பாக சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மற்றும் சங்க பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



தென்சென்னை–எஸ்2 மடிப்பாக்கம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களின் பீம் போட்டோகிராபி எனும் புதிய ஸ்டுடியோவின் திறப்பு விழா(01.03.2026) பழவந்தாங்களில் நடைபெற்றது. CVPA சார்பாக சங்க நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் பலரும் திறப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

Regd No. : 446/96

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ரூபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
| --- | --- |
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351